20.11.2025 OS.No.41/2016 DW4 Name :**மணிமாறன்**

குறுக்கு விசாரணை

1. சத்தியமூர்த்தி என்னுடைய தகப்பனார். உதயகுமார் என்னுடைய அண்ணன். நாங்கள் ஒரே வீட்டில்தான் குடியிருக்கிறோம். 2012ல் எனக்கு என்ன வயது என்று நியாபகம் இல்லை. என்னுடைய அப்பா வீட்டோடு உள்ளார் வெளியே எங்கும் செல்வதில்லை. நீலாம்மாள் என் தகப்பனாருக்கு பவர் எழுதிகொடுத்தபோது நான் உடன் இருந்தேன். என்னுடன் என் உதயகுமார், சின்னதம்பி, ராஜேந்திரன் ஆகியோர்கள் இருந்தார்கள். நீலம்மாளின் வாரிசுகளும் இருந்தார்கள்.
2. பொதுஅதிகார ஆவணத்தில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. கிரைய ஒப்பந்தம் எழுதும்போதும் நான் உடன் இருந்தேன். அப்போது என் அண்ணன் உதயகுமார் இருந்தார். வேறு யார் இருந்தார்கள் என்று நியாபகம் இல்லை. என்னுடைய அப்பா என் அண்ணானுக்கு மட்டும்தான் சொத்து எழுதி கொடுத்துள்ளார். அந்த சமயத்தில் நான் உடன் இருந்தேன். நீலம்மாள் வகையராக்கள் அப்போது யாரும் இல்லை. நாங்கள் கூப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஊராட்சி மன்றத்தில் நான் உறுப்பினாராக இல்லை.
3. என்னுடைய அண்ணி உபதலைவராக இருந்ததால் ஊராட்சி தீர்மானம் பற்றி தெரியும். உதயகுமார் 37 நபர்களுக்கு சொத்து விற்றுள்ளார். அவற்றை நீலம்மாளின் வகையரா யாரும் விற்கவில்லை. அவர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்களா என்று தெரியாது. அவற்றில் 7

முதல் 8 நபர்கள் வீடு கட்டியுள்ளார்கள். மேல்நிலை தண்ணீர்டேங்க் தொட்டி, ஈபி அலுவலகம், கணிணி அறை உள்ளது.

4. நீலம்மாள் வகையரா எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளது உண்மைதான். நீலம்மாள் என் அப்பா, என் அண்ணன் மீது வழக்கு போட்டுள்ளார் மற்ற நபர்கள் யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்று தெரியாது. ஈபி ஆபிஸ், கணிணி அறை, தண்ணீர் தொட்டி எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று முழுமையாக தெரியாது. 37 பேருக்கு விற்ற ஆவணங்களில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. வழக்கு விவரம் தெரியாமல் பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 20/11/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.11.20 17:42:28 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.